بسم اللہ الرحمن الرحیم          نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم          وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 37

ஆசிரியர் முஸஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

16 ஸஃபர் 1438 ஹிஜ்ரி கமரி     17 நுபுவ்வத் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி     17 நவம்பர் 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இறை தூதர்களை விட்டும் தெரிந்து கொண்டே முகம் திருப்புவர்களுக்கு எந்த தண்டனையும் கிடைக்காது என்று கருதும் விஷயமல்ல இது. இந்த பாவத்திற்கான காரணமாக இருப்பவன் நான் அல்ல. மாறாக, ஒருவர்தான் அதற்கு காரணமாக இருக்கின்றார். அவருக்கு உதவி செய்யவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். அதாவது, அந்த நபர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். எந்த நபர் என்னை ஏற்றுக் கொள்ள மாட்டாரோ அவர் எனக்கல்ல. மாறாக, எவர் எனது வருகை பற்றி முன்னறிவிப்பு செய்திருந்தாரோ அவருக்கு கீழ்ப்படியாதவராகவே அவர் இருக்கின்றார்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

எவர் என் மீது நம்பிக்கை கொள்ளமாட்டாரோ அவர் எனது பெயரைக் கூட அறியாதவராக இருந்தாலும் எனது அழைப்பு சென்று சேராத அத்தகைய நாட்டில் அவர் இருந்தாலும் கூட என்னை ஏற்றுக் கொள்ளாததன் காரணமாக அவர் காஃபிராகி விடுவார்; நரகத்தில் வீழ்வார் என்று நான் எனது நூலில் எழுதியுள்ளதாக டாக்டர் அப்துல் ஹகீம் கான் அவர்கள் தனது நூலான அல் மஸீஹுத் தஜ்ஜால் போன்றவற்றில் என் மீது குற்றம் சாட்டியுள்ளார். இது டாக்டர் (அப்துல் ஹகீம் கான்) அவர்கள் முழுக்க முழுக்க என் மீது இட்டுக்கட்டிக் கூறியுள்ள பொய்யாகும். நான் எனது எந்தவொரு நூலிலும் அல்லது பிரசுரத்திலும் அவ்வாறு எழுதியதில்லை. நான் அவ்வாறு எழுதியுள்ளேன் என்பதை நிரூபித்துக் காட்டும் வகையில் நான் அவ்வாறு எழுதியிருக்கும் நூலை எடுத்துக் காட்டுவது அவர் மீது கடமையாகும். இந்த நபர் தந்திரமாக தனது வழக்கத்திற்கேற்ப என் மீது இட்டுக்கட்டி பொய் கூறியுள்ளார். இது எத்தகைய விஷயம் என்றால் வெளிப்படையாகப் பார்க்கும்போது எந்தவோர் அறிவும் அதை ஏற்றுக் கொள்ளாது. எந்த நபர் முற்றிலும் எனது பெயரைக் கூட தெரியாதவராக இருக்கின்றாரோ அவருக்கு எப்படி தண்டனை வழங்க முடியும்? எனினும், நான் இதைக் கூறுகின்றேன். அதாவது, நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருப்பதால் இறைவன் பொதுவாக எனக்காக விண்ணிலிருந்து அடையாளங்களை வெளிப்படுத்தி -யுள்ளான். எனவே, எந்த நபர் மீது நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றேன் என்பதைப் பற்றிய அத்தாட்சிகள் இறைவனது பார்வையில் நிறைவடைந்து விட்டதோ, மேலும் எனது வாதத்தைப் பற்றிய தகவல் அவருக்கு கிடைத்திருக்கின்றதோ அவர் தண்டனைக்கு தகுதியுடையவராக இருப்பார். ஏனென்றால், இறை தூதர்களை விட்டும் தெரிந்து கொண்டே முகம் திருப்புபவர்களுக்கு எந்த தண்டனையும் கிடைக்காது என்று கருதும் விஷயமல்ல இது. இந்த பாவத்திற்கான காரணமாக இருப்பவன் நான் அல்லன். மாறாக, ஒருவர்தான் அதற்கு காரணமாக இருக்கின்றார். அவருக்கு உதவி செய்யவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். அந்த நபர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். எந்த நபர் என்னை ஏற்றுக் கொள்ள மாட்டாரோ அவர் எனக்கல்ல. மாறாக, எவர் எனது வருகை பற்றி முன்னறிவிப்பு செய்திருந்தாரோ அவருக்கு கீழ்ப்படியாதவராகவே அவர் இருக்கின்றார்.

அவ்வாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்வது தொடர்பான எனது கொள்கையும் இதுவேயாகும். அதாவது, எந்த நபருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழைப்பு எட்டி விட்டதோ அவருக்கு பெருமானார் (ஸல்) அவர்களின் வருகை பற்றி தகவல் தெரிந்து விட்ட பிறகு இறைவனது பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுத்துவம் தொடர்பான அத்தாட்சிகள் அவர் மீது நிறைவடைந்திருந்தால் பிறகு அவர் அதனை மறுக்கின்ற நிலையில் மரணித்தால் பிறகு எப்போதும் நரகின் தண்டனையைப் பெறுபவராக அவர் ஆகி விடுவார்.

மேலும் அத்தாட்சிகள் நிறைவடைந்தது தொடர்பான அறிவு இறைவனுக்கு மட்டுமே இருக்கின்றது. எனினும், அறிவு இந்த விஷயத்தை விரும்புகின்றது. மக்கள் பல்வேறு ஆற்றல்களையும் பல்வேறு புரியும் திறனையும் கொண்டவர்களாக இருப்பதால் அத்தாட்சிகளை நிறைவடையச் செய்வதும் கூட ஒரே வழிமுறைக்கேற்ப இருக்காது. எந்த மக்களால் அவர்களிடமுள்ள அறிவின் ஆற்றலின் காரணமாக இறைவனது தெளிவுகளையும் அடையாளங்களையும் மார்க்கத்தின் சிறப்புகளையும் மிகவும் எளிதாகப் புரிந்து கொள்ள முடிகின்றதோ, அவற்றை அடையாளங் கண்டு கொள்ள முடிகின்றதோ அவர்கள் இறைவனின் தூதரை மறுத்து விட்டால் அவர்கள் மறுப்பின் முதல் தகுதியில் இருப்பர். மேலும், எந்த மக்கள் இந்த அளவு புரியும் திறனும் அறிவும் உள்ளவர்களாக இல்லாத நிலையில் இறைவனது பார்வையில் அவர்கள் மீதும் கூட அவர்களின் புரியும் திறனுக்கு ஏற்ப அத்தாட்சி நிறைவடைந்திருந்தால் தூதரை மறுப்பதற்கான தண்டனை அவர்களுக்கும் கூட கிடைக்கும். ஆனால், முதலில் மறுத்தவர்களுடன் ஒப்பிடும்போது இவர்களுக்கு குறைவான தண்டனை கிடைக்கும். எந்நிலையிலும் ஒருவரது மறுப்பு மற்றும் அவர் மீது அத்தாட்சிகள் நிறைவடைந்திருப்பது தொடர்பாக தனித்தனியாக ஒவ்வொருவரது நிலையையும் கேட்டு அறிவது நமது பணியல்ல. இது மறைவான செய்திகளை அறிந்துள்ள அந்த இறைவனின் பணியாகும். நம்மால் இவ்வளவுதான் கூற முடியும். அதாவது இறைவனது பார்வையில் எவர் மீது அத்தாட்சிகள் நிறைவடைந்து விட்டதோ மேலும் இறைவனது பார்வையில் எவர் மறுப்பவராக இருக்கின்றாரோ அவர் தண்டனைக்கு தகுதியுடையவராக இருக்கின்றார். எனினும், ஷரீஅத்தின் அடிப்படை வெளிப்படையானவற்றின் மீது இருப்பதால் எங்களால் மறுப்பவர்களை நம்பிக்கை கொண்டவர்கள் என்று கூற முடியாது. அவர்கள் தண்டனையிலிருந்து தப்பி விடுவர் என்றும் எங்களால் கூற முடியாது. மறுப்பவர்களையே நாம் காஃபிர்கள் என்று கூறுகின்றோம். ஏனென்றால், காஃபிர் என்ற சொல் முஃமீன் (நம்பிக்கை கொண்டவர்) என்பதற்கு எதிராக உள்ளதாகும். மறுத்தல் இரு வகைப்படும். ஒரு நபர் இஸ்லாத்தையே மறுக்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறைவனின் தூதராக அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இது முதல் வகையான நிராகரிப்பு ஆகும். இரண்டாவது வகையான நிராகரிப்பு இதுவாகும். உதாரணமாக, ஒருவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் மீது அத்தாட்சி நிறைவடைந்த பிறகும் கூட அவரை இவர் பொய்யர் என்று கருதுகின்றாார். அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவரை உண்மையாளராக கருத வேண்டும் என்றும் இறைவனும் அவனது தூதரும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். முன்னர் இருந்த நபிமார்களின் வேதங்களிலும் கூட இதுபற்றி வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. எனவே, இறைவன் மற்றும் அவனது தூதரின் கூற்றை மறுப்பவரே காஃபிராக இருக்கின்றார். கவனத்துடன் பார்ப்பதாக இருந்தால் இந்த இரு வகையான நிராகரித்தலும் ஒரே வகையைச் சார்ந்ததாகும். ஏனென்றால், எந்த நபர் (தூதரை) அடையாளங் கண்டு கொண்ட பிறகும் கூட இறைவன் மற்றும் அவனது தூதரின் கட்டளையை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர் திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியின் தெளிவான கருத்துகளுக்கு ஏற்ப இறைவனையும் தூதரையும்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ்வின் அருள்தான் நமக்கு இந்த வாய்ப்பை வழங்கியிருக்கிறது. நாம் குறைந்த அளவு வசதிகளை வைத்திருந்த போதிலும் உலகின் எல்லா இடங்களிலும் மாநாடுகளை நடத்துகிறோம். இந்த மூன்று நாட்களில் குறிப்பாக டியூட்டி தருகிற ஒவ்வொருவரின் மூளையிலும் உலகியல் சிந்தனையே முற்றிலும் மறைந்து விட்டது போன்று தென்படுகிறது. மாநாட்டை நடத்துவது மற்றும் தன்னலமற்ற பணி செய்தல் ஆகியவை மட்டுமே பெரும்பாலாரின் சிந்தனையாக இருக்கிறது. இந்தப் பணி உண்மையில் ஓர் அமைதியான தப்லீக் ஆக இருக்கிறது.

ஒவ்வொரு துறையின் தொண்டர்களும் தத்தமது துறையில் என்ன பணி செய்தார்களோ அதற்காக அவர்களுக்கு ஜமாஅத் மக்களும் நன்றி செலுத்த வேண்டும். அதேபோன்று தொண்டர்களும் கூட அல்லாஹ் தொண்டு செய்ய வாய்ப்பு வழங்கியதற்காக நன்றி செலுத்த வேண்டும்.

ஆண்டு மாநாடு நமக்கு ஆன்மீக மேம்பாட்டிற்கு காரணமாக அமைகிற அதே வேளையில் மற்றவருக்கும் கூட ஜமாஅத்தின் அறிமுகம் மற்றும் தொடர்புகள் ஏற்படக் காரணமாக அமைகிறது. இஸ்லாத்தின் உண்மையான நிழற்படம் உலகிற்கு தெரிய வருகிறது.

தற்கால சூழ்நிலைகளைப் பற்றி நான் பேசினாலும் அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி பேசினாலும் அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்புகளையும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வருகையையும் இணைத்துக் கூறுவதன் மூலமாக இஸ்லாத்தின் உண்மையை இவர்களுக்கு புரிய வைக்க வேண்டும் என்பது எனது முயற்சியாக இருந்தது.

கனடா அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாட்டின்போது டியூட்டி கொடுக்கின்ற பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்குமாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்ற அஹ்மதிகள், அஹ்மதி அல்லாத விருந்தினர்களின் தாக்கங்கள், பத்திரிகைகள், டி.வி. சேனல்கள் மற்றும் ஏனைய சமூக ஊடகங்கள் கனடா ஆண்டு மாநாட்டை முழுமையாக கவரேஜ் செய்தது ஆகியவற்றைப் பற்றி ஹுஸூர் அவர்கள் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **கனடாவின் Toronto -விலுள்ள பைத்துல் இஸ்லாம் பள்ளிவாயிலில் 14 அக்டோபர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **இஹா** மாதம் **14 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

அல்லாஹ்வின் அருளால் கனடாவின் ஆண்டு மாநாடு கடந்த வாரம் நடந்தது. அல்லாஹ்வின் அருளை வெளிப்படுத்தியவாறு நிறைவு பெற்றது. இதற்காக நாம் எவ்வளவுதான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினாலும் அது குறைவுதான். அல்லாஹ்வின் அருள்தான் நமக்கு இந்த வாய்ப்பை வழங்கியிருக்கிறது. நாம் குறைந்த அளவு வசதிகளை வைத்திருந்த போதிலும் உலகின் எல்லா இடங்களிலும் மாநாடுகளை நடத்துகிறோம். முழுக்க முழுக்க அல்லாஹ்வின் சிறப்பான அருளால் பொதுவாக ஏற்பாடுகளும் மிகச் சிறப்பாக இருக்கின்றன. நம்மிடம் ஒவ்வொரு துறையிலும் பணி செய்து மிகச் சிறந்த தரத்தை நிறுவத்தக்க திறன் பெற்றவர்கள் இல்லை. தன்னவார்வத் தொண்டர்கள் இருக்கிறார்கள். குத்தாமிலும் இருக்கிறார்கள். அத்ஃபாலிலும் இருக்கிறார்கள். அன்ஸார் மற்றும் லஜ்னா நாஸிராத்திலும் இருக்கிறார்கள். அவர்களிலிருந்து அதிகாரிகளும் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களின் கீழ் பணி செய்பவர்களும் நியமிக்கப்படுகிறார்கள். உலகியல் கல்வி அடிப்படையில் குறைவாக படித்தவர்கள் கூட சில வேளை அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். மருத்துவர்களும் பொறியாளர்களும் Ph.D படித்தவர்களும் அவர்களுக்கு கட்டுப்படுகிறார்கள். எனது படிப்பு அதிகம்; எனது பதவி உயர்ந்தது என்று எந்த பாகுபாடும் பார்ப்பதில்லை. இந்த கட்டுப்படுதலின் தரத்தை நாம் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் காண முடிகிறது. பிறகு எல்லா வகையிலும் ஒத்துழைப்பும் தருகிறார்கள். ஒத்துழைப்பு மட்டுமின்றி முழுமையாக கட்டுப்படவும் செய்கிறார்கள். கட்டுப்பட்டவாறு தமது கடமையை நிறைவேற்றுகிறார்கள்.

இந்த மூன்று நாட்களில் குறிப்பாக டியூட்டி தருகிற ஒவ்வொருவரின் மூளையிலும் உலகியல் சிந்தனையே முற்றிலும் மறைந்து விட்டது போன்று தென்படுகிறது. மாநாட்டை நடத்துவது மற்றும் தன்னலமற்ற பணி செய்தல் ஆகியவை மட்டுமே பெரும்பாலாரின் சிந்தனையாக இருக்கிறது அல்லது பொதுவாக எல்லா ஊழியர்களின் சிந்தனையாக இருக்கிறது. அவர்கள் தொண்டிற்காக தம்மை அர்ப்பணித்து விடுகின்றனர். இவையெல்லாம் உலகம் சார்ந்த வேலையல்ல. இவை செயல்களில் தன்னலமின்மையையும் பணிவையும் வழங்குகின்றன. இது முழுவதும் அல்லாஹ்வின் அருளேயாகும். அல்லாஹ்வின் அருள் இல்லையென்றால், எந்த உணர்வுடன் இந்த எல்லா சிறுவர்களும், இளைஞர்களும், பெண்களும், ஆண்களும் பணி செய்வது ஒருபோதும் உருவாகி இருக்க முடியாது.

இதனை அல்லாஹ்தான் எல்லா தொண்டர்களின் உள்ளத்திலும், 'நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிகளுக்கு தொண்டு செய்வதற்காக எல்லா சிந்தனைகளுக்கும் விருப்பங்களுக்கும் அப்பாற்பட்டு உங்களை அர்ப்பணிக்க வேண்டும்; பணி செய்ய வேண்டும்' என்ற எண்ணத்தை இட்டிருக்கிறான். அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே கருத்தில் கொண்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருந்தாளிகளுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை இட்டிருக்கிறான். இதற்காக நாம் முதலில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவன் ஜமாஅத்திற்கு தொண்டு செய்யக்கூடிய அத்தகைய தொண்டர்களை வழங்கியுள்ளான். அவர்கள் அதிகம் படித்தவர்களாக இருந்தபோதிலும் தன்னலமின்றி கழிப்பிடத்தை சுத்தம் செய்யச் சொன்னாலும் செய்கிறார்கள். உணவு சமைக்கச் சொன்னாலும் சமைக்கிறார்கள். உணவு பரிமாறச் சொன்னால் பரிமாறுகிறார்கள். பாதுகாப்புப் பணிகளைச் செய்கிறார்கள். பார்கிங் பணிகளைச் செய்கிறார்கள். இவ்வாறு பல துறைகளில் பணியாற்றுகின்றனர். நான் கூறியது போன்று தன்னலமின்றி பணி செய்கிறார்கள். சிறுவர்கள் ஆர்வத்துடன் தமது டியூட்டிகளை தருகிறார்கள். சிறுவர்கள் ஓர் ஆர்வத்துடன் மாநாட்டுத் திடலில் மவுனமாக தண்ணீர் புகட்டுகிறார்கள். அந்நிலையில் அந்நிய விருந்தினர்களால் வியக்காமல் இருக்க முடியவில்லை. இந்த சிறுவர்களிடம் எப்படி நீங்கள் தொண்டு செய்யும் ஆர்வத்தை உருவாக்கினீர்கள்? என்று வியப்புடன் கேட்கின்றனர்.

உலகின் மார்க்க பாடசாலைகளுக்குச் செல்லும் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு ஜிஹாதின் பெயரில் தவறான பணிகள் மற்றும் அநீதிகளுக்கான பயிற்சி அளிக்கிறார்கள். அநியாயமான முறையில் மனித உயிரை அழிக்க முயற்சி செய்யப்படுகிறது. வாழ்வை அழிக்க முயற்சி செய்யப்படும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சிறுவர்களும் இளைஞர்களும் வாழ்வை வழங்கும் பணியைச் செய்கிறார்கள். ஆன்மீக நீரைப் புகட்டவும் ஆன்மீக உணவை அளிக்கவும் செய்கின்ற சபைகளில் கூடவே சிறுவர்களும் இளைஞர்களும் இளம் பெண்களும் பௌதீக தண்ணீரை வழங்கும் கடமையையும் நிறைவேற்றுகிறார்கள். வாழ்வை எடுக்கும் ஜிஹாதல்ல; மாறாக வாழ்வை தரும் ஜிஹாதில் பங்கெடுக்கிறார்கள். இதனை சிலர் வெளிப்படுத்தவும் செய்கிறார்கள். சிறு குழந்தைகள் மகிழ்ச்சியுடன் தண்ணீர் புகட்டுவதைப் பார்க்கும்போது தம்மை அறியாமல் அவர்களுக்கு அன்பு ஏற்படுகிறது. நாம் இதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் அதே வேளையில் கலந்து கொள்கின்ற எல்லாருக்கும் மாநாட்டைக் கேட்பவர்களுக்கும் இந்த தொண்டர் –களுக்கும் நன்றி செலுத்த வேண்டும். இவர்களுள் பலர் மாநாட்டு ஏற்பாட்டிற்காக மாநாட்டிற்கு முன்பிருந்தே பணி செய்கிறார்கள். பிறகும் கூட சுருட்டும் பணிக்காக நேரம் தருகிறார்கள். சொந்த வேலைக்கு பாதிப்பு ஏற்படுவதையும் இவர்கள் பொருட்படுத்துவதில்லை; பொருள் நஷ்டத்தையும் பொருட்படுத்துவதில்லை. மாநாட்டிற்காக அவர்களுக்கு விடுமுறை கிடைக்காத நிலையில் வேலையை விட்டு விட்டனர் என்று சிலர் என்னிடம் கூறினர். அவர்கள் தமது தூக்கத்தையும் ஓய்வையும் கூட பொருட்படுத்துவதில்லை. ஒரேயொரு கவலை மட்டுமே இருந்தது.

நாம் தொண்டு செய்ய வேண்டும். மாநாட்டின் ஏற்பாடுகளை எந்த அளவுக்கு முடியுமோ சிறப்பாக செய்ய வேண்டும் என்ற கவலை மட்டுமே இருந்தது.

எனவே, நான் மாநாட்டில் கலந்து கொள்பவர்களிடம் கூறும் அதே வேளையில் நானும் இந்த பணி செய்த சிறுவர்கள், இளைஞர்கள், ஆண்கள், பெண்களுக்கு நன்றி செலுத்துகிறேன். அவர்கள் தன்னார்வத்துடன் மனமுவந்து தம்மை அர்ப்பணித்திருக்கிறார்கள். சேவை மனப்பான்மையுடன் சின்னஞ்சிறு பணியையும் மகிழ்ச்சியுடனும் பொறுப்புணர்வுடனும் செய்தார்கள். இந்தப் பணி உண்மையில் ஓர் அமைதியான தப்லீக் ஆக இருக்கிறது. வெளிப்படையாகப் பார்க்கும் போது ஊழியர்கள் பணி செய்ய வருகிறார்கள். ஆனால் வெளியிலிருந்து வருபவர்களுக்கு அது தப்லீகிற்கு காரணமாக அமைகிறது. பலரது நேர்வழிக்கு காரணமாகவும் அமைந்து விடுகிறது.

இந்த வகையில் அமெரிக்காவிலிருந்து வந்திருந்த ஜமாஅத் அல்லாத பெங்காளியான நண்பர் ஷஹீதுர் ரஹ்மான் ஒரு குழுவுடன் வந்திருந்தார். இவர் வாழ்நாள் முழுக்க முல்லாக்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தார். அவர்கள் எடுத்து வைத்த இஸ்லாம் அவரை சன்னிகளின் பள்ளிவாயில்களிலிருந்து தூர விலக்கி விட்டது. தீவிரவாதத்தின் மீது இவருக்கு வெறுப்பு இருந்தது. அவரது மனைவி ஒரு நல்ல பெண்ணாக இருக்கிறார். நீங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மாநாட்டிற்குச் செல்லுங்கள் என்று அவரது மனைவி அவரை வலியுறுத்தினார். இந்த வகையில் இந்த பெங்காளி அமெரிக்காவிலிருந்து தமது நண்பர்கள் சுமார் 90 பெங்காளிகளுடன் இந்த மாநாட்டிற்கு வந்திருந்தார். அவர் அஹ்மதிய்யா ஜமாஅத் மக்களின் தர்பிய்யத், அன்பு, கண்ணியம் ஆகியவற்றைப் பார்த்தார். இந்த மாநாட்டைப் பார்த்த பிறகு நான் மீண்டும் இஸ்லாத்தின் பக்கம் திரும்பி வந்துள்ளேன் என்று கூறினார். இவர் மாநாட்டின் இறுதி நாளில் மக்களை விட்டு தனித்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். கூட்டத்தின் நெரிசல் காரணமாக சாப்பிடச் செல்ல விரும்பவில்லை. இந்நிலையில் ஒரு காதிம் அவரிடம் வந்தார். அவருக்கு உணவும் தண்ணீரும் வழங்கினார். பிறகு உணவு உண்டதும் அவரது சாப்பாடு டப்பாவை வாங்கி போடுவதற்காகவும் எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தார். இந்த செயல் அவருக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அவர் என்னை சந்தித்தபோது இது பற்றி அவர் கூறினார். மாநாடு அவரிடம் மிகவும் ஆழிய தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. விரைவில் அவர் ஜமாஅத்தில் இணைவார் – இன்ஷா அல்லாஹ். இவ்வாறு மாநாட்டில் தப்லீகும் கூட நடைபெறுகிறது.

பிறகு ஒரு காதிம் உடைய உயர் நல்லொழுக்கம், எளிய பணிவிடை அவரது சிந்தனையை மாற்றக்கூடியதாக ஆகி விட்டது. அந்த காதிமிற்கு ஒருவேளை இவர் அஹ்மதியா? அஹ்மதியல்லாதவரா? என்று கூட தெரிந்திருக்காது. அவரோ ஓர் உணர்வுடன் தொண்டு செய்திருந்தார். ஆனால், இந்த தொண்டு அந்த அந்நியரிடம் ஆன்மீக மாற்றம் ஏற்படக் காரணமாகி விட்டது. அதேபோன்று சில அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். அப்பகுதியில் வசிப்பவர்களான அவர்கள் பொதுவாகவே ஜமாஅத்தின் தொண்டுகளை அறிந்திருப்பார்கள். அவற்றை ஒப்புக் கொள்ளவும் செய்வார்கள். அவர்களிடம் மாநாட்டின் ஏற்பாடுகள் ஒவ்வொரு முறையும் புதிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் உள்ள மக்கள் மிக அமைதியான முறையில் அமர்ந்திருக்கிறார்கள். தொண்டர்களும் அமைதியாக உட்கார்ந்திருப்பார்கள்.

வாகன் (Vaughan) பகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் டெப் ஷுல்டு (Dbe Shulte) கூறுகிறார்: எப்போதும் போல் இன்றும் நான் மிகவும் தாக்கத்திற்கு ஆளானேன். மாநாட்டில் எவ்வளவு தன்னார்வத் தொண்டர்கள் இருந்தார்களோ அவர்கள் அனைவரும் சேர்ந்து இந்த மாநாட்டை மிகவும் சீரிய முறையில் நடத்திச் செல்கிறார்கள். எனது மதிப்பின்படி இங்கு இன்று 25 ஆயிரம் பேர் கூடியிருக்கிறார்கள் என்று கூறினார். இந்த அடிப்படையில் இந்த மாநாட்டை சீரிய முறையில் நடத்துவது தன்னார்வத் தொண்டர்களின் அளவு கடந்த உழைப்பின் விளைவாகும். தன்னார்வத் தொண்டர்களும் ஊழியர்களும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். இந்த அடிப்படையில் நாம் எல்லா தொண்டர்களுக்கும் நன்றி செலுத்த வேண்டும். அவர்கள் விருந்தாளிகளுக்கு தன்னலமற்ற சேவை செய்கிற அதே வேளையில் அமைதியாக ஒரு முபல்லிக் ஆகி அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை கொண்டு சேர்க்கவும் செய்கிறார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று மாநாட்டில் கலந்து கொள்கிற எல்லாரும் இவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். அல்லாஹ் இந்த எல்லா தொண்டர்களின் தொண்டுணர்வையும் எப்போதும் அதிகரிப்பானாக! அவர்களுக்கு இந்த தொண்டிற்கு மிகச் சிறந்த கூலியும் வழங்குவானாக! இவர்கள் எல்லாரது வெளிப்படையான தொண்டுணர்வை மட்டுமின்றி அவர் தம் ஈமானையும் உறுதியையும் கூட அதிகரிப்பானாக! அவர்களின் செயல்களும் மிகச் சிறந்தவை –யாகவும் இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்றவையாகவும் அமையட்டுமாக!

அதுபோன்று M.T.A ஊழியர்களுக்கும் மாநாட்டிற்கு வந்தவர்களும் அல்லது கனடாவில் வசித்து மாநாட்டில் கலந்து கொள்ளாதவர்களும் நன்றி செலுத்த வேண்டும். அதே வேளையில் உலகில் வாழும் அஹ்மதிகளும் நன்றி செலுத்த வேண்டும். கனடாவின் உள்ளூர் தன்னார்வத் தொண்டர்கள் பெரும்பாலார் கனடாவின் உள்ளூர்வாசிகள் ஆவர். சிலர் இலண்டனிலிருந்து தலைமையகத்தில் இருந்து வந்திருந்தனர். இவர்கள் அனைவரும் மிகவும் உழைத்து மாநாட்டின் மூன்று நாட்களிலும் மாநாட்டின் LIVE நிகழ்ச்சிகளைக் காட்டும் ஏற்பாட்டை செய்தனர். நான் கூறியது போன்று இம்முறை இலண்டனிலிருந்தும் ஒரு குழு வந்தது. நான் எங்கிருந்தாலும் அந்த M.T.A –வின் தலைமையக குழு ஒன்று வருகிறது. அக்குழு இங்கு வாடகைக்கு எடுப்பதற்குப் பதில் M.T.A –வின் மேலிட குழு uplink –ற்காக டிஷ் எடுத்துக் கொண்டு வந்திருந்தது. அதனால் பெரிய பயனும் இருந்தது. நாம் நேரத்தின் அடிப்படையில் சுதந்திரமாகவும் இருந்தோம். ஏனெனில் வாடகைக்கு எடுத்தால் நேரத்தையும் அனுசரிக்க வேண்டியது வரும். அதிக காலக்கட்டம் எடுத்தால் அதிக பணம் வாடகையாக கொடுக்க வேண்டியதிருக்கும். ஒட்டுமொத்தமாக இதனால் நமக்கு 10–15 ஆயிரம் டாலர் பணம் மிச்சமாகியுள்ளது. எனவே, ஒவ்வொரு துறையின் தொண்டர்களும் தத்தமது துறையில் என்ன பணி செய்தார்களோ அதற்காக அவர்களுக்கு ஜமாஅத் மக்களும் நன்றி செலுத்த வேண்டும். அதேபோன்று தொண்டர்களும் கூட அல்லாஹ் தொண்டு செய்ய வாய்ப்பு வழங்கியதற்காக நன்றி செலுத்த வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் நன்றி செலுத்துபவராக இருந்தால் உங்கள் தகுதிகளையும் திறமைகளையும் கூட நான் அதிகரிப்பேன். எனது மற்ற அருள்களையும் கூட வழங்குவேன். அல்லாஹ் *அஸீதன்னகும்* – நான் அதிகமாக வழங்குவேன் என்று கூறும்போது அது ஒரு வரம்பிற்குட்பட்டதல்ல. அல்லாஹ் வழங்கும்போது அளவில்லாமல் வழங்கி விடுகிறான். எல்லா வகையிலும் வழங்குகிறான். எனவே நம்பிக்கையாளர்கள் ஒவ்வொரு வெற்றியிலும் நல்ல காரியத்திலும் இறைவனுக்கு நன்றியுடையவர்களாக இருப்பதே அவர்களது நடைமுறையாகும். பலவீனத்தைப் பார்க்கும் போது இறைவனிடம் கருணையை வேண்ட வேண்டும். இஸ்திக்ஃபாரும் செய்ய வேண்டும்.

பெரிய பெரிய ஏற்பாடுகளைச் செய்யும் போது பலவீனங்களும் ஏற்படத்தான் செய்கின்றன. ஏனெனில் விருந்தினர்கள் அவற்றை பொருட்படுத்தாமல் பொதுவாக எல்லாப் பணிகளையும் பாராட்டியிருக்கிறார்கள். இதற்காக எல்லா ஊழியர்களும் நம்மவருக்கும் அந்நியர்களுக்கும் மேலும் எல்லா விருந்தாளிகளுக்கும் நன்றி செலுத்த வேண்டும். பலவீனங்களைப் பார்ப்பதாயின் உதாரணமாக மாநாட்டிற்கு முதல் நாள் விருந்தோம்பல் துறை வருகையை சரியாக மதிப்பிடவில்லை. முதலிலேயே 22 ஆயிரம் பேருக்கு உணவு சமைப்போம் என்று சொல்லியும் இருந்தனர். ஆனால் 20 ஆயிரம் பேருக்கு தான் சமைத்தனர். இதனால் துறையின் மதிப்பீட்டின் படி 2000 பேருக்கு உணவு கிடைக்கவில்லை. இதற்காக அவர்கள் மன்னிப்பும் கேட்டனர். ஆனால், விருந்தாளிகளும் கூட மாநாட்டைக் கேட்கும் நோக்கத்திற்காகத்தான் வந்திருந்தனர். அதே நாளில் அல்லது மறுநாள் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டபோது சிலர் அதனை மகிழ்ச்சியுடன் சகித்துக் கொண்டனர். எந்த முறையீடும் செய்யவில்லை. மாறாக, இவ்விஷயம் பிறரது சீர்திருத்தத்திற்கும் காரணமாக அமைந்தது.

ஒருவர் எனக்கு எழுதியுள்ளார்: ஒரு நீண்ட வரிசை உணவுக்காக நின்றது. ஆனால், கணிசமான நேரம் காத்திருந்த பிறகு முதலில் உணவு வருகிறது; இருந்த உணவு தீர்ந்து விட்டது எனக் கூறப்பட்டது. பிறகு இனி வராது; தீர்ந்து விட்டது என்று கூறப்பட்டது. இதனைக் கேட்டு எனக்கு நிர்வாகத்தின் மீது பெரும் கோபம் ஏற்பட்டது. இந்நிலையில் எனக்கு முன்னால் நின்று கொண்டிருந்த மனிதர், உணவு தீர்ந்து விட்டது – அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினார். நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? என்று நான் கேட்டேன். அதற்கு அவர், காய்ந்த ரொட்டியின் சில துண்டுகள் என்னிடம் உள்ளன. வாருங்கள் அதனை நாம் தண்ணீரில் நனைத்து சாப்பிடுவோம் என்றார். உணவு கிடைத்தால் அந்த சுன்னத்தை நம்மால் நிறைவேற்ற முடியாமல் போயிருக்கும். இன்று அந்த சுன்னத்தை நிறைவேற்றுவோம் என்று கூறினார்.

இவ்வாறு கூறியவர் எனக்கு எழுதுகிறார்: இதனைப் பார்த்து எனது கோபம் அகன்றது மட்டுமல்லாமல் எதற்காக எனக்கு கோபம் வந்தது என்று நினைக்கும் போது எனக்க வெட்கமும் ஏற்பட்டது. நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டேன். அல்லாஹ் எத்தகைய மக்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்திற்கு வழங்கி இருக்கின்றான்! எனவே, நிர்வாகமும் கூட விருந்தினர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். இவர்கள் இத்தகைய உயர் நல்லொழுக்கம் காட்டுபவர்களாக இருக்கிறார்கள். இம்முறை நிர்வாகத்தின் தரப்பிலிருந்து நல்ல அம்சம் ஒன்று தென்பட்டது. தமது பலவீனத்தை மறைப்பதற்குப் பதில் அதில் கவனம் செலுத்தி அதனை வெளிப்படுத்தவும் செய்தனர். ஆனால், அது மட்டும் போதாது. மாறாக மாநாட்டின் ஏற்பாடு தொடர்பாக அதனை Red book –ல் எழுதுங்கள். வருங்காலத்தில் இதனை விட சிறந்த திட்டங்களை இடுங்கள். இத்துடன் நான் இன்னொன்றையும் கூறுவேன். இந்த இடம் பொதுவாக 18 ஆயிரம், 19 ஆயிரம், 20 ஆயிரம் வரை மக்கள் அமரக்கூடிய இடமாக வெளிப்படையில் தோன்றுகிறது. அதனை விட அதிகமானால் இந்த இடம் போதாது. இப்போது ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் பரவுகிறது. பெரிய இடம் குறித்து ஜமாஅத் நிர்வாகம் யோசிக்க வேண்டும் அல்லது குறைந்தபட்சம் என்னை அழைப்பதாக இருந்தால் இந்த இடம் இப்போது போதுமானதாக இருக்காது. எனவே இது பற்றி கண்டிப்பாக யோசியுங்கள். நிர்வாகம் தனது பலவீனத்தை தானே வெளிப்படுத்தியிருக்கிறது. அதனை கூறுகிறேன். அவற்றுள் சில எனக்கு முன்னரே வந்து விட்டது. அவை சரியாகவும் இருக்கின்றன.

இது தவிர வேறு குறைபாடுகள் இருந்தால் மக்கள் தாமே எனக்கு எழுதலாம். அதனால் மிகச் சிறந்த ஏற்பாடு செய்ய முடியும். முதலில் எழுதப்பட்டிருப்பதாவது, அரபி விருந்தினர்களின் உணவில் காரம் அதிகமாக இருந்தது. அது அரபிகளின் வழக்கத்திற்கு ஏற்றதாக இருக்கவில்லை. அதனை சரிசெய்ய வேண்டும். பிறகு நான் கூறினேன். உணவு தட்டுப்பாடு ஆகி விட்டது. பிறகு ஆண்களுக்கு ஒரு மணி நேரம் தாமதமாக உணவு வந்து சேர்ந்தது. உணவு இங்கு சமைக்கப்படுகிறது என்றால் முப்பது கிலோ மீட்டர் தூரத்திற்கு அதனை எடுத்துச் செல்ல வேண்டியதிருந்தது. பிறகு உணவுப் பாத்திரம் இருந்த டிரக் தவறுதலாக ஆண்களுக்கு வர வேண்டியது பெண்களுக்கு சென்று விட்டது. இதனால் ஆண்களுக்கு சிரமத்தை சகித்துக் கொள்ள வேண்டியது ஏற்பட்டால் பிரச்சனை இல்லை. பெண்களும் குழந்தைகளும் பசியுடன் இருக்கக் கூடாது. எனவே அவ்வாறு சென்றதும் நல்லதாகப் போயிற்று.

பிறகு நிர்வாகம் கூறுகிறது: உணவு தயாரிப்பவர் குறைவாக இருக்கின்றனர். இதனை நிறைவேற்றுவது ஜமாஅத்தின் பணியாகும். பணி செய்பவர்களுக்கு ஜமாஅத்தில் எந்த குறைவும் இல்லை. நிர்வாகத்திற்கு தொண்டுணர்வு கொண்ட மக்களை தேர்வு செய்ய வேண்டும். தன்னலம் கொண்டவர்களை தேர்ந்தெடுக்கக் கூடாது என்ற சிந்தனை தேவையாகும். எனவே இந்த சிந்தனையை மாற்றுங்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தில் தொண்டு செய்பவர்கள் அல்லாஹ்வின் அருளால் அதிகமாக இருக்கின்றனர். மாநாட்டுத் திடலில் கழுவும் அறைகளில் அதிகமாக காத்திருக்க வேண்டியதிருந்தது. மக்களின் புகாரும் வந்தது. நிர்வாகமும் இதனை உணர்ந்தது. பொறுமையுடன் காத்திருப்பது மட்டுமல்லாமல் மிகவும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியது வந்தது. ஒரு நாள் முன்பு நான் இவர்களிடம் சரியான ஏற்பாடு இருக்கிறதா? இல்லையா? என்று கேட்கவும் செய்தேன். என்னிடம் கூறப்பட்டதற்கேற்ப சரியான ஏற்பாடு இல்லை என்றே எனக்கு தோன்றுகிறது. வருங்காலத்தில் நிரந்தர ஏற்பாடு செய்ய முடியாவிட்டாலும் தற்காலிக ஏற்பாடு செய்ய வேண்டும்.

லங்கர் கானாவில் ஆடியோ, வீடியோ ஏற்பாடு இல்லாததும் நிர்வாகத்தின் தவறாகும். இதுவும் மிகவும் அவசியமான ஒன்றாகும். தொண்டர்கள் மாநாட்டை கேட்க முடியாது. அவர்களுக்கு மாநாட்டை கேட்பதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும். பிறகு ஆண்களுக்கு பின் பகுதியில் சரியாக சப்தம் கேட்கவில்லை என்று கூறுகின்றனர். எனது சொற்பொழிவின் போது சப்தம் சரியாக இருந்தது என்று கூறப்பட்டது. அந்த தகவல் தவறு என்றால் பின்னால் அமர்ந்திருந்தவர்கள் கூறுங்கள். எனது கருத்தின்படி முதலில் சப்தம் சரியில்லாமல் இருந்தது. பிறகு நமது சில ஊழியர்கள் அதை சரி செய்ய முயன்றனர்.

அதேபோனறு அரபியர்களுக்காக மொழிபெயர்ப்பிற்கான ஏற்பாடு இருந்தது. ஆனால் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படவில்லை. சில அரபிகள் என்னை சந்தித்த போது முதல் நாள் குத்பாவை கேட்க முடியாமல் போனது. மறுநாள் தான் தெரிய வந்தது என்று கூறினர். ஆனால் நிர்வாகத்திற்கு இந்த அளவுக்காவது அனுபவம் இருந்திருக்க வேண்டும். எந்தெந்த மொழிகளிலெல்லாம் மொழிபெயர்ப்பு நடந்ததோ அங்கெல்லாம் மீண்டும் மீண்டும் இன்ன இடத்தில் சென்று மொழியாக்கத்தைக் கேட்பதற்கான Aid –ஐப் பெறுமாறு அறிவிப்பு செய்ய வேண்டும். அறிவிப்பு பலகைகளிலும் அவ்வாறு எழுதப்பட்டிருக்க வேண்டும். நுழைவு வாயிலிலும் எழுதப்பட்டிருக்க வேண்டும். இப்போது நான் விருந்தினர்கள் மற்றும் பத்திரிகைகளின் சில தாக்கங்களை எழுதுகிறேன். அது மீண்டும் நமது கவனத்தை நன்றி செலுத்துவதன் பக்கம் திருப்புகிறது. எவ்வாறு அல்லாஹ் தானே மக்களின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறான்! நமது முயற்சிகள் எல்லாம் விளைவுகளுக்கு எதிரில் ஒன்றுமே இல்லாததற்கு சமமாகும். முதலில் சிரியாவைச் சார்ந்த நமது அரபு அஹ்மதி நண்பர்களின் தாக்கங்களைக் கூறுகிறேன். அவர்களுக்கு இவ்வளவு பெரிய மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முதன் முறையாக வாய்ப்பு கிடைத்துள்ளது. சுதந்திரமாக இபாதத் செய்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. ஏனெனில் அங்கு சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. முதலில் சூழ்நிலை மோசமாக இருக்கவில்லை என்றாலும் சூழ்நிலைகள் மோசமான பிறகு பாவம் பல வருடங்களாக அவர்கள் கஷ்டத்திற்குள்ளாகி இருந்தனர்.

ஓர் அஹ்மதி நண்பர் அஹ்மத் தர்வேஷ் சாஹிப் கூறுகிறார்: இது எனது முதல் மாநாடாக இருந்தது. நான் மாநாட்டில் நுழைந்தேன். காலத்தின் கலீஃபா இருப்பதைப் பார்த்தேன். எனக்கு இஸ்லாத்தில் நுழைவதாகவே பட்டது. எனது வாழ்வில் மிகப்பெரும் மாற்றம் ஏற்பட்டது. அது என்னவென்றால், எனது தொழுகை இறையச்சம் மற்றும் கவனத்துடன் நிறைந்ததாகி விட்டது. இந்த மாற்றம் மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு ஒவ்வோர் அஹ்மதியிடமும் வர வேண்டும். சில நாட்களுக்காக மட்டும் இல்லை. மாறாக, நிரந்தரமாக வர வேண்டும். அவர் கூறுகிறார்: நான் கனடாவில் சில விருந்தினர்களையும் அழைத்து வந்தேன். சிம்சன் (Simpson) என்ற பெயருடையவர். அவர் தமது மனைவியுடன் வந்திருந்தார். அம்மனிதர் முதலில் கிறித்தவராக இருந்தார். இப்போது நாத்திகர் ஆகி விட்டார். மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு அவர் கூறுகிறார்: நான் வாழ்வில் ஒருபோதும் அன்பு, சகோதரத்துவம், அமைதி, சமாதானம் பற்றி இத்தகைய களங்கமற்ற உண்மையான செய்தியைக் கேட்டதில்லை. இப்படிப்பட்ட இஸ்லாத்தைப் பற்றி இவ்வாறு கேட்டதில் மகிழ்ச்சி. அல்லாஹ் இந்த மகிழ்ச்சியை அவரது உள்ளம் திறக்க காரணமாக ஆக்குவானாக!

அதேபோன்று ஒரு சிரியாவைச் சார்ந்த அஹ்மதி அல்ஹாஜ் அப்துல்லாஹ் சாஹிப் கூறுகிறார்: ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களை வாழ்நாள் முழுவதும் மறக்க இயலாது. உலகத்தின் மிக உயர்ந்த ஜமாஅத்தின் ஆயிரக்கணக்கான மக்கள் கனடாவில் உலகின் மிகச் சிறந்த மனிதருடன் திரண்டிருந்தனர்.

பிறகு கூறுகிறார்: மாநாட்டின் ஏற்பாடுகள், வரவேற்பு, ஒவ்வொரு தேவையான பொருள்களையும் ஏற்பாடு செய்து தருதல், எந்த அளவுக்கு எனில் குழந்தைகளின் விளையாட்டுக்கு கூட கவனம் செலுத்தி ஏற்பாடு செய்தல், பல்வேறு ஏற்பாடு செய்தல், அசாதாரணமானதாக இருந்தன. மாநாட்டின் சூழல் அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றால் நிறைந்திருந்தது. ஆயிரக்கணக்கானோரை அழைத்தல், போக்குவரத்திற்கான ஏற்பாடு, சாப்பாடு ஏற்பாடு செய்தல் அசாதாரணமான ஒன்றாகும்.

அவர் கூறுகிறார்: நான் ஒரு பத்திரிகையாளர் குழு மற்றும் ஒரு முஸ்லிம் குடும்பத்திற்கும் அழைப்பு விடுத்திருந்தேன். அனைவரும் மாநாட்டின் அழகிய ஏற்பாட்டைப் பார்த்து வியந்து போய் விட்டனர். அவர்கள் சிறப்பான முறையில் எனது கடைசி நாள் உரையை மிகவும் விரும்பினர். அஹ்மதிகளுக்கு அவர்களது இமாமின் மீதுள்ள நேசம் இந்த விருந்தாளிகளுக்கு மிகவும் வியப்பிற்குரிய விஷயமாகும்.

அதேபோன்று அப்துல் காதர் சாஹிப் கூறுகிறார்: நான் முதன் முறையாக பார்த்தேன். ஜல்ஸாவுக்காக எவ்வளவு பெரிய வேலைகள் நடக்கின்றன? எவ்வாறு ஒவ்வொரு பணியாளரும் ஒவ்வொரு துறையிலும் தேனீக்கள் போன்று எந்த கூச்சலும் ஆரவாரமும் இன்றி எந்தப் பிரச்சனையும் செய்யாமல் பணி செய்கின்றனர். ஒவ்வொருவரும் தமக்கு தொண்டு செய்ய வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று விரும்பினர். குறிப்பாக நான் அரபி என்று அவர்களுக்கு தெரிந்த போது என்னுடன் அசாதாரண மரியாதையுடன் அவர்கள் நடந்து கொண்டனர்.

ரேம் முஸ்தஃபா சாஹிபா கூறுகிறார்: மாநாட்டில் இவ்வளவு பெரிய எண்ணிக்கை இருந்தும் கூட மிகவும் ஒழுங்கமைப்புடனும், தொகுப்பாகவும் இருந்தது. எனக்கு மிக அதிகமாக ஆன்மீக உணர்வு ஏற்பட்டது. அது மக்களின் முகங்களில் தென்பட்டது. இந்த ஆன்மீகம் எப்போதும் நம்மிடம் நிலைத்திருக்குமாறு அல்லாஹ் செய்வானாக! இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியும் சொற்பொழிவுகளை மொழிபெயர்த்தும் மற்ற பணிகளில் பங்கெடுத்தும் அல்லாஹ்வின் அருளால் இவர்கள் எங்களது ஈமானில் அதிகமான வளர்ச்சி ஏற்படச் செய்தனர்.

பிறகு சல்மா ஜபூலீ சாஹிபா கூறுகிறார்: மாநாட்டின் உறுதியான ஏற்பாட்டைப் பார்க்கும் போது மாநாடு ஓர் உடலைப் போன்று ஒன்றிணைந்துள்ளது என்று கூறலாம். அது ஒன்று மற்றொன்றிற்கு உதவி செய்கிறது. போக்குவரத்துத் துறைக்கு நன்றி. அவர்கள் எம்மை மாநாட்டிற்குஅழைத்து வந்து வீட்டில் கொண்டு விடும் பணியை நல்ல முறையில் செய்தனர். மாநாட்டில் பல்வேறு சமுதாயங்கள், பல்வேறு நாடுகள், பல்வேறு நிறங்கள் ஒன்றிணைந்து ஒரே நோக்கத்திற்காக பணி செய்தனர். அது இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை உலகில் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதாகும்.

ஹுஸைன் ஆபிதீன் சாஹிப் கூறுகிறார்: ஆண்டு மாநாட்டில் கழிந்த நொடிகள் எமது வாழ்வின் மிகச் சிறந்த பொழுதுகளாகும். நான் டி.வி –யில் ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளைப் பார்த்தேன். அல்லாஹ்வே! எனக்கும் கூட காலத்தின் கலீஃபாவுடன் மாநாட்டில் கலந்து கொள்ள வாய்ப்பு வேண்டும் என்று துஆ செய்தேன். ஆனால் எனது துஆ இவ்வளவு விரைவில் கபூல் ஆகும் என்று


**சுத்தமான தேன் கிடைக்கும்**

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**

B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)

Institute of Honey bees' Medicine Education Research & Sales
101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,
Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284


**திருக்குர்ஆனிலிருந்து**

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**

வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

நான் நினைத்துக் கூட பார்த்ததில்லை. நான் கேட்டதை விட அதிகமாக இறைவன் வழங்குவான் என்றும் நினைக்கவில்லை. நான் மாநாட்டு மேடைக்கு முன் அமர்ந்திருந்தேன். நான் கடுமையான சூழ்நிலையில் சிரியா மற்றும் துருக்கியில் கழித்த சிரமம் மிகுந்த நாட்களும் வேதனை மிக்க நேரங்களும் கண்முன் வந்தன. அப்போது என் உள்ளம் இறைவனைப் புகழ்வதால் நிறைந்தது. நான் கூறினேன். அது எவ்வளவு வேதனை மிக்க நாட்களாக இருந்தன? நான் காலத்தின் கலீஃபாவின் முன் அமர்ந்திருக்க இந்த நாள் எத்தகைய நாள்? இது முழுக்க முழுக்க இறைவனது அருளாகும்.

ஒரு சிரியாவைச் சார்ந்த நண்பர் ஃபிராஸ் சாஹிப் கூறுகிறார்: நான் முதன் முறையாக ஜமாஅத்தின் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கிறேன். இவ்வளவு மக்களைப் பார்த்து என் உள்ளத்தில் திகில் ஏற்பட்டு விட்டது. மொழிபெயர்த்தவர் ஒருவேளை இதனை சொல்லியிருக்கிறாரா அல்லது யதார்த்தத்தில் அப்படித்தான் சொல்லப்பட்டதா என்பது தெரியவில்லை. எனது கருத்தின்படி நேசம் என்ற பொருளில் குறிப்பிட்டிருக்கிறார். இம்மக்களோ கனடாவைச் சார்ந்தவர் மட்டுமின்றி பல்வேறு பகுதியிலிருந்து வந்துள்ளனர். அவர்கள் ஒரேயொரு சமுதாய மக்களும் அல்ல. மாறாக, பல்வேறு நிறத்துடனும் நாட்டுடனும் தொடர்புடையவர்கள் ஆவர்.

அதுபோன்று மாநாட்டில் புதிய புதிய தொழில்நுட்ப பயன்பாடுகள் மிக உயர்ந்த ஏற்பாடுகள் நிர்வாகத்தின் பல்வேறு வழிகாட்டல்களை வருகை தந்திருப்பவர்களிடம் தெரிவித்த முறை, கட்டுப்படுதலை காண்பித்த முறை ஆகியவை மிகவும் நம்பிக்கையை வலுவூட்டக் கூடியதாக இருந்தது. கலீஃபத்துல் மஸீஹின் இருப்பும், அவர்களின் சொற்பொழிவும் என்னை எல்லாவற்றிலும் அதிகமாக மகிழ்ச்சிப்படுத்த காரணமாக்கியது. எவ்வாறிருப்பினும் ஒரு சில அஹ்மதிகளின் தாக்கத்தைக் கூறினேன். அவர்களுள் பழையவர்களும் புதியவர்களும் சிரியாவிலிருந்து வந்தவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் சூழ்நிலையின் காரணமாக சிரியாவிலிருந்து ஹிஜ்ரத் செய்து இங்கு வந்தவர்கள் ஆவர். அந்நியரின் சில தாக்கங்களையும் எடுத்து வைக்கிறேன். ஜமாஅத்தின் அறிமுகமும் தப்லீகிற்கான வழியும் அதன் மூலம் திறக்கின்றன. ஜெர்மன் கவுன்சிலேட் இங்கு வந்திருந்தார். அவர் என்னிடம் நான் 4 வாரங்கள் முன்பு இங்கு வந்தேன் என்று கூறினார். ஜமாஅத்துடன் அதிகமான அறிமுகம் இல்லை. பல்வேறு நாடுகளில் இருந்திருக்கிறார். கூறுகிறார்: நான் இன்று வரை இஸ்லாமிய போதனைகள் பற்றி இதுவரை கேட்காத திரண்ட கருத்தை இறுதி உரையில் கேட்டேன். மிகவும் ஆக்கப்பூர்வமாக இருந்தது.

பிறகு கூறுகிறார்: உண்மையான இஸ்லாத்தை எடுத்து வைத்தார். அது நேர்மை மற்றும் நேசம் குறித்து போதனை செய்கிறது. ஒவ்வொரு சொல்லிலும் உண்மை தென்பட்டது. அந்தோ உலகின் மீடியாக்கள், ஈராக்கின் பகுதாதி IS – ஐப் பற்றி பிரச்சாரம் செய்வதற்காக எவ்வளவு நேரம் செலவழிக்கிறது. அந்த நேரத்தை இந்த அமைதியின் தூதுவருக்கு தந்தால் உலகில் அமைதி நிலை பெற்று விடும். அவரது ஒவ்வொரு வாக்கியமும் உண்மையை அடிப்படையாகக் கொண்டதாகும். அதில் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஒரு வேதனை இருந்தது. கூறுகிறார்: எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு நானும் இந்த தூதுச் செய்தியை மேற்கொண்டு பரப்புவேன். இவ்வாறு அந்நிய மக்களும் கூட அல்லாஹ்வின் அருளால் நமது தூதுவர்களாக ஆகின்றார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜுடி (Judi) சாஹிபா இவரை இங்குள்ள மக்கள் அறிவர். அவரும் கூறுகிறார்: உங்களது கலீஃபா நிலைமைகளுக்கேற்ப உங்களுக்கு ஒரு பணியை ஒப்படைத்துள்ளார். எல்லாருடனும் அன்பு, எவரிடமும் இல்லை வெறுப்பு என்ற தூதுச் செய்தியை பரப்புவதே அந்த பொறுப்பாகும்.

இதனை விட அதிகமாக முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் நேசத்துடன் தமது தொடர்பை வைத்துக் கொள்ள வேண்டும். எல்லாரும் நேர்மையையும் நீதியையும் பயன்படுத்த வேண்டும். ஏனென்றால் அவ்வாறு செய்யா விட்டால் மூன்றாம் உலகப் போர் ஏற்படும் என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. பொதுமக்களும் அரசியல்வாதிகளும் இணைந்து பணியாற்ற வேண்டும். அதனால் உலகில் அமைதியும் சமாதானமும் நிலைபெறும். நாம் முஸ்லிம்களிடமும் முஸ்லிம் அல்லாதவர்களிடமும் இந்த தூதுச் செய்தியைக் கொண்டு சேர்க்க வேண்டும். அதன் மூலம் தீவிரவாத விரும்பிகளின் செயல்களுக்கு இஸ்லாத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை என்று மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். தீவிரவாதிகளும் தங்கள் மார்க்கத்திற்காக மற்றவருக்கு அவப்பெயர் ஏற்படுத்துகின்றனர்.

Seventh Day Evangelist Church (எவேன்ஜலிஸ்ட்) உடன் தொடர்புடைய விருந்தினர் ஒருவர் வந்திருந்தார். அவர் கூறுகிறார்: இன்று எனது உள்ளம் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளது. கலீஃபத்துல் மஸீஹ் தனது உரையில் அமைதி, பாதுகாப்பு பற்றி கூறினார்கள். மக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் கண்டு அறிவது அவசியமாகும். அஹ்மதிய்யா ஜமாஅத் செய்யும் பணி மக்களுக்கு தெரிய வேண்டும். முஸ்லிம்கள் மீடியா மக்களிடம் கூறுவது போன்றவர்கள் அல்ல. இஸ்லாத்தின் உண்மையான போதனை மிகவும் அமைதி நிறைந்தது.

பெலிஸ் (Belize) –லிருந்து வந்த அங்குள்ள மேயர். இவர் யூ.கே விற்கு வந்துள்ளார். இவர் கூறுகிறார்: இந்த சொற்பொழிவால் என்னிடம் பெரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறு உலகளாவிய விவகாரங்களை அது வெளிச்சமிட்டுள்ளது? கலீஃபத்துல் மஸீஹ் அஹ்மதிகளுக்கு மட்டும் நேர்வழிக்குக் காரணமாக இல்லை. அவர் முழு உலகின் நேர்வழிக்கும் காரணியாக ஆக முடியும். கலீஃபத்துல் மஸீஹ் சொற்பொழிவில் தெரிவித்த கருத்துக்களை என்னால் மறக்க முடியாது.

இப்பகுதியின் மேயராகிய ஒரு விருந்தினர் கூறுகிறார்: ஜமாஅத்திற்கு தூதுச் செய்தியை தருகிறார்கள். நாமும் அதனைப் பயன்படுத்தி ஆன்மீக முன்னேற்றம் பெற வேண்டும். மார்க்கம் என்று பார்க்காமல் எல்லா மனிதருடனும் நல்ல முறையில் நடக்க வேண்டும் என்ற தூதுச் செய்தி நமக்கு கிடைத்துள்ளது. இதனை நான் நினைவில் கொள்ள வேண்டும். உங்கள் கலீஃபா கற்றுத் தந்தால் அமைதியை உலகில் நிலைநாட்டுங்கள். நாம் எல்லாரும் நமது பொறுப்பை நிறைவேற்றுவது கடமையாகும்.

பிராம்ப்டன் (Brampton) –லிருந்து வந்த ஒரு விருந்தினர் கூறுகிறார்: மாநாட்டில் எனக்கு ஒரேயொரு தூதுச் செய்தி கிடைத்தது. அது அமைதியை நிலைநாட்டுங்கள் என்பதாகும்.

ஒரு விருந்தினர் கூறுகிறார்: இறுதி உரையைக் கேட்டேன். எனது உணர்வுகளை கூறுவதற்கு என்னிடம் வார்த்தைகளே இல்லை.

ஒரு பெண் எம்.பி யாஸ்மீன் அதன்ஸீ சாஹிபா கூறுகிறார்கள்: கலீஃபாவின் தூதுச் செய்தியும் பெண்களிடையே ஆற்றிய உரையும் மிக நன்றாக இருந்தது. குறிப்பாக ஒரு தாய் முழு குடும்பத்திற்கும் ஓர் அடித்தளமாக இருக்கிறாள் என்ற இந்தக் கருத்து முழு சமுதாயத்தையும் உறுதியாக்குகிறது.

ஒரு பெண் மேரீ லீன் கூறுகிறார்: எனக்கு இது ஒன்பதாவது மாநாடு ஆகும். கலீஃபாவின் சொற்பொழிவை கேட்பதற்காக துடித்தேன்; எதிர்பார்த்தேன். மேலும் கூறுகிறார்: ஒவ்வொருவரும் மற்றவருடன் மரியாதையுடன் நடந்து கொள்கிறார்கள். இந்த மாநாட்டின் முக்கியத்துவத்தையும் ஒவ்வொருவரும் அறிவர். பாதுகாப்பு ஏற்பாடும் மிக உயர்வாக இருந்தது. ஒலி அமைப்பு நன்றாக வேலை செய்தது. மொழிபெயர்ப்பிற்கு Headset இருந்ததைப் பார்த்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அது இல்லாமல் நாங்கள் மாநாட்டிற்கு வந்த நோக்கம் நிறைவேற இயலாததாக இருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் பேச்சைக் கேட்க முடியாமல் போயிருக்கும். எப்போதும் போல் நீங்கள் விருந்தினர்களை அதற்கு நாங்கள் உரிமையுள்ளவர்களாக இல்லை என்றாலும் மரியாதையாக நடத்துகிறீர்கள்.

இதற்காக நாங்கள் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். ஆயிரக்கணக்கான அஹ்மதிகள் அமைதியால் நிறைந்திருப்பதைப் பார்த்து மிகப் பெரிய தாக்கம் ஏற்பட்டது. இந்த தோற்றம் ஐரோப்பா மற்றும் அரபு உலகத்தின் நிலைமைக்கு எதிர்மறையாக இருந்தது. மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் கட்டுப்படுதலைப் பார்த்து மனநிறைவை அடைந்தேன். ஆண்டு மாநாட்டிற்கு வருகிற விருந்தினர்கள் அல்லாஹ்வின் அருளால் நல்ல தாக்கம் பெற்றே செல்கின்றனர். வெளிநாடுகளில் இருந்தும் விருந்தினர்கள் வந்திருந்தனர். குறிப்பாக இங்கு மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா நாடுகளிலிருந்து மக்கள் ஜல்ஸாவுக்கு வருகிறார்கள். மாநாட்டின் சூழ்நிலையைப் பார்த்த பிறகு

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப் பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

ஜலாலுத்தீன்
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179

O.A.N. DOORS & STEELS
O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்
*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*
Ambai Road, (Opp. Karuna Clinic), Kulavanikarpuram, Tirunelveli - 627 005
O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

இஸ்லாத்தை பற்றிய தவறான வடிவங்கள் விலகி விடுகின்றன. இந்த நாடுகளில் நமது பிரச்சார நிலையங்கள் புத்தம் புதிதாக தோன்றியுள்ளன. சில அஹ்மதிகள் 2–3 வருடங்கள் முன் பைஅத் செய்தவர்கள் ஆவர். புதிதாக ஜமாஅத் உருவாகியுள்ளது. இவர்களுக்கு சில பிரச்சனைகள் ஏற்படுகின்றன. சில உயர் அதிகாரிகள் இங்கு வந்து ஜல்ஸாவைப் பார்த்ததனால் அவர்களிடம் வேலை செய்வது எளிதாகிறது. அவர்களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்கிறது. பெரும்பாலான மக்கள் யூ.கே ஜல்ஸாவுக்கு வருகிறார்கள். ஆனால், இங்கும் சிலர் வந்திருந்தார்கள். மாநாடு இந்த அடிப்படையிலும் தப்லீகிற்கான வழியை திறக்கிறது.

எவ்வாறிருப்பினும், ஆண்டு மாநாடு நமது ஆன்மீக மேம்பாட்டிற்கு காரணமாக அமைகிற அதே வேளையில் மற்றவருக்கும் கூட ஜமாஅத்தின் அறிமுகம் மற்றும் தொடர்புகள் ஏற்படக் காரணமாக அமைகிறது. இஸ்லாத்தின் உண்மையான நிழற்படம் உலகிற்கு தெரிய வருகிறது. கடந்த சில காலமாக முஸ்லிம் நாடுகளின் சூழல் காரணமாக உலகில் ஏற்பட்ட சூழ்நிலைகள் தென்படுவதனால் மீடியாக்களின் கவனம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பக்கம் திருப்பியுள்ளது. கவனம் திரும்பியதில் முதல் விஷயம் அல்லாஹ்வின் அருள் ஆகும். ஏனெனில் முதலில் அவன் தான் நம் பக்கம் கவனத்தை திருப்பியுள்ளான். முதலில் நாம் கூறினாலும் இவர்கள் வரமாட்டார்கள். அதற்குப் பிறகு நமது இளைஞர்களுக்கும் இதில் பெரும் பங்கு உள்ளது. அவர்கள் மீடியாக்களுடன் தொடர்பை ஏற்படுத்தினார்கள். பரந்த அளவில் தொடர்பு கொண்டார்கள். கடனாவின் மீடியா குழுவிலும் கூட பெரும்பாலானவர் இளைஞர்கள் ஆவர். மிகவும் உழைத்து பிரஸ் மற்றும் மீடியாவில் தமது தொடர்பை அதிகரித்திருக் –கிறார்கள். கனடாவிலும் கூட நமது இளைஞர்கள் இந்த அளவுக்கு தமது பங்களிப்பை செய்வார்கள் என்று நான் மதிப்பிடவில்லை. இங்கு வந்து பார்த்த பிறகுதான் தெரிய வந்தது – மாஷா அல்லாஹ். இங்கும் நமது இளைஞர்கள் மிகவும் உழைத்து பணி செய்கிறார்கள். பெரும்பாலான இளைஞர்கள் பணி செய்வதைப் பார்த்தேன். பிரஸ் மூலமாக நமது இளைஞர்கள் இந்த தப்லீகை செய்கிறார்கள். மிகவும் ஆர்வம் உள்ளது. சில பெரும் பத்திரிகைகள் மற்றும் சேனல்களுடன் தொடர்பு கொண்டு வந்தார்கள். சில சேனல்கள் நல்ல Response –ம் தந்தன. சிலர், மார்க்கத்தில் எமக்கு ஆர்வமில்லை என்று கூறி விட்டனர். இதனால் உங்களது செய்திகளை வெளியிட இயலாது அல்லது உங்கள் கலீஃபா வந்தால் அதற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை கவரேஜிற்காக நாங்கள் வர இயலாது என்று கூறி விட்டனர். சில இளைஞர்கள் இதனால் நிம்மதியிழந்து விட்டனர். அல்லாஹ் அவர்களின் ஈமானை உறுதிப்படுத்தும் காட்சியை அவர்களுக்கு காட்டினான். அதற்கான ஏற்பாட்டை செய்தான்.

உதாரணமாக, ஒரு சேனலில் நமது இளைஞர்கள் தொடர்பு கொண்டனர். அவர்கள் தமக்கு ஆர்வமில்லை என்று கூறி விட்டனர். சிரியாவைச் சார்ந்த ஒருவரும் நான் பத்திரிகையாளரையும் அழைத்து வந்திருந்தேன் எனக் குறிப்பிட்டிருந்தார். அநேகமாக இதுவும் அதே பத்திரிகையாளர்களின் குழுவாக இருக்கலாம். இந்த இளைஞர் தமது பிரதிநிதியை ஜல்ஸாவுக்கு அழைத்து வர வேண்டும் என விரும்பினார். இஸ்லாத்தின் சரியான தூதுச் செய்தி அஹ்மதிய்யத்தின் சரியான தூதுச் செய்தி போய் சேர வேண்டும் என்று விரும்பினார்.

நான் கூறியது போன்று அல்லாஹ்வும் தனது பணியைச் செய்கின்றான். இந்த சேனல சிரியாவின் அகதிகளைக் குறித்து ஒருவேளை ஒரு டாக்குமெண்டரி தயாரிக்க இருந்தது. இதற்காக அது சிரியாவின் அகதியைத் தேடி வெளியேறிய போது தற்செயலாக இதனை அல்லாஹ்வின் விருப்பம் என்று கூற வேண்டும். இறை நியதி அதுவாக இருந்தது. அவர்களுக்கு எந்த சிரியாவின் அகதியுடன் தொடர்பு ஏற்பட்டதோ அவர் அஹ்மதியாக இருந்தார். அந்த அஹ்மதி, எமது மாநாடு நடைபெற உள்ளது. அங்கு வாருங்கள். அங்கு உங்களுக்கு எல்லா விஷயமும் தெரிந்து விடும் என்று கூறினார். இவ்வாறு முதலில் மறுத்து விட்ட அந்த மீடியாவும் வர வேண்டியதாயிற்று. எவ்வாறிருப்பினும் அல்லாஹ் பரந்த அளவில் ஜமாஅத்தின் அறிமுகத்தை ஏதாவது வழியில் ஏற்படுத்தி விடுகிறான். மீடியாவும் உலகில் பெரும் பங்கு வகிக்கிறது. அதிலும் பரந்த அளவில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்படுகிறது. இதற்காக வேலை செய்கிற அஹ்மதி தன்னார்வத் தொண்டர்களிடம் நான் கூறிக் கொள்கிறேன். மிகவும் உழைப்புடனும் பணிவுடனும் இப்பணியை அதிகமாக்கிக் கொண்டே செல்லுங்கள். அல்லாஹ்வின் அருள் எதில் எப்போதும் கிடைக்கிறதோ அதனை நாம் தேட வேண்டும்.

மீடியாக்களுடன் தொடர்புடைய சிலர் பத்திரிகைகள் மற்றும் ரேடியோ சேனல்களில் உள்ளவர்கள் மாநாட்டின் முதல் நாளான ஜுமுஆ நாளில் வந்திருந்தனர். சின்னஞ்சிறு Press Conferance –ம் இருந்தது. நேர்காணலும் செய்தனர். அதிலும் நல்ல கவரேஜ் இருந்தது. ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்பட்டது. இஸ்லாத்தின் உண்மையான போதனை எடுத்துக் கூறப்பட்டது. நான் அவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூதுச் செய்தியைக் கொண்டு சேர்த்தேன். தற்கால சூழ்நிலைகளைப் பற்றி நான் பேசினாலும் அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி பேசினாலும் அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்புகளையும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வருகையையும் இணைத்துக் கூறுவதன் மூலமாக இஸ்லாத்தின் உண்மையை இவர்களுக்கு புரிய வைக்க வேண்டும் என்பது எனது முயற்சியாக இருந்தது.

எவ்வாறிருப்பினும், மீடியா ஜல்ஸாவின் கவரேஜ் தந்தது. அதன் சுருக்கமாவது, கனடாவின் மிகப் பெரும் பத்திரிகையான டொரன்டோ ஸ்டார், குளோபல் மெயில், நேஷனல் மெயில் ஆகியவை பரந்த அளவில் மாநாட்டைப் பற்றிய செய்திகளை வெளியிட்டன. அவர்களது கருத்தின்படி 3.9 மில்லியன் மக்கள் வரை செய்தி போய் சேர்ந்துள்ளது. 3 பெரும் பத்திரிகைகள் தவிர 25க்கும் மேற்பட்ட மற்ற பத்திரிகைகள் மூலம் 5 இலட்சத்தை விட அதிகமானோருக்கு செய்தி போய் சேர்ந்தது. உருது 8, பஞ்சாபி 10, ஸ்பேனிஷ், அரபி, பெங்காளி தனது மூன்று பத்திரிகைகள் மூலம் மூன்று இலட்சத்தை விட அதிகமான மக்களுக்கு செய்தி போய் சேர்ந்தது. கனடாவின் மிகப்பெரும் ரேடியோ ஸ்டேஷன் Sixty Eight News மூலமாக அந்த ரேடியோ கேட்பவர்கள் இரண்டரை மில்லியன் பேர் என்று கூறப்படுகிறது. அதன் மூலம் மாநாட்டின் செய்தி சென்றது.

சமூக வலைதளங்களான டிவிட்டர், இன்ஸ்டாகிராம், ஃபேஸ்புக், பெரிஸ்கோப் மூலமாக 20 இலட்சம் பேருக்கு செய்தி போய் சேர்ந்தது. CTV, Global TV, CTTV, Rajars TV, CBC போன்ற 16க்கும் மேற்பட்ட முக்கிய Stream TV சேனல்கள் மாநாட்டின் செய்தியை ஒளிபரப்பியது. அவர்களின் கருத்தின்படி அவை மூலமாக 25 இலட்சம் பேர் வரை செய்தி சென்று சேர்ந்தது. உருது பஞ்சாபி, பெங்காளி, அரபி, கானியன் மற்றும் பிற மொழி டி.வி ஒளிபரப்புகள் மூலம் ஒரு இலட்சம் பேர் வரை செய்தி போய் சேர்ந்தது. ஒட்டுமொத்தமாக டி.வி மூலமாக 6.6 மில்லியன் பேர் வரை செய்தி சென்று சேர்ந்தது. பத்திரிகை மூலமாக 2.8 மில்லியன் பேர் வரையும், ரேடியோ ஸ்டேஷன் மூலமாக 3.5 மில்லியன் மக்கள் வரை செய்தி சென்று சேர்ந்தது. சமூக வலைதளங்கள் மூலமாக 2.8 மில்லியன் வரை ஒட்டுமொத்தமாக அவர்களின் கருத்தின்படி 16 மில்லியன் பேர் வரை செய்தி சென்று சேர்ந்துள்ளது. மிகவும் எச்சரிக்கையுடன் கணக்கிட்டால் கூட ஜமாஅத்தின் தூதுச் செய்தி ஜல்ஸா வாயிலாக 10 மில்லியன் பேர் வரை ஜமாஅத் செய்தியும் அறிமுகமும் சென்றிருக்கும். நான் கேட்ட பார்த்த செய்திகளில் இவர்கள் மிகவும் நம்பகத்தன்மையுடன் செய்தி வெளியிட்டுள்ளனர். இவர்கள் நமது ஜமாஅத்தின் செய்தியை வழங்கினர். ஜல்ஸாவின் செய்தியை வழங்கினர். நமது போதனையைக் கூறினர்.

ஆக, இது அல்லாஹ்வின் பணியாகும். அவனே இதனை செய்கிறான். ஜமாஅத்தின் அறிமுகம் பரவுகிறது. ஆனால் அத்துடன் நமது கவனமும் இந்த விஷயங்களில் மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது. உங்களது நிலைமைகளை சரி செய்தவாறு இறைவனுடன் உங்களுக்கு இருக்கும் தொடர்பை அதிகமாக்குங்கள். அல்லாஹ் தீயதாக கூறியதை தீயதாகக் கருதுங்கள். அல்லாஹ் செய்யுமாறு கட்டளையிட்டுள்ளதை செய்யுங்கள் என்பதன் பக்கம் திரும்ப வேண்டும். அல்லாஹ் தொண்டு செய்வதற்கான வாய்ப்பினை வழங்கினால் அதனை இறை அருளாகக் கருதுங்கள். எல்லா பொறுப்பாளர்களும் தொண்டு செய்பவர்களும் தமது பொறுப்பை தவ்வாவின்படி நடந்தவாறு நிறைவு செய்ய முயற்சி செய்யுங்கள். ஜல்ஸாவில் கலந்து கொண்ட மற்றும் சொற்பொழிவுகளைக் கேட்ட எல்லாரும் தம்மை ஆய்வு செய்யுங்கள். நாம் ஜல்ஸாவில் கேட்டவற்றை நமது வாழ்வின் அங்கமாக்கினோமோ? எவ்வாறு நாம் நல்ல விஷயத்தை நமது வாழ்வில் அங்கமாக்கலாம் என்றும் ஆய்வு செய்யுங்கள். அதற்காக முயற்சி செய்யுங்கள். இதுவே அல்லாஹ்விற்கு உண்மையான நன்றி செலுத்துதல் ஆகும். தற்காலிக நன்றியுடைமை அல்ல. இதனை எப்போதும் கவனத்தில் கொள்ளுங்கள். இதன் மூலமே நம் மீது அல்லாஹ் தமது அருளை மேலும் அதிகமாக பொழிகிறான். அல்லாஹ் இதன்படி செயல்படுவதற்கான வாய்ப்பினை ஒவ்வோர் அஹ்மதிக்கும் வழங்குவானாக! அவர்கள் உண்மையிலேயே இறைவனை கண்டறிபவர்களாகவும் தொடர்பு ஏற்படுத்துபவர்களாகவும் இருப்பார்களாக!

★ ★ ★ ★ ★

### *பிழை திருத்தம்*

*பதர் 6 தொகுதி 1 இதழ் 34 –ன் 8–ம் பக்கத்தின் முதல் பத்தியின் 12 –வது வரியில் ‘நரகம் இங்கேயே வந்து விடும்’ என்பதை வாசகர்கள் **‘நகரம் இங்கேயே வந்து விடும்’** என்று திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.* *– ஆசிரியர்*

# உங்களது நாட்டின் மீதுள்ள அன்பு உங்களது ஈமானின் ஒரு பகுதியாகும்

## 30 ஆகஸ்டு 2016 -ல் ஜெர்மனியிலுள்ள Frankenthal நகரில் மஸ்ஜிது நூரின் அடிக்கல் நாட்டப்பட்ட நிகழ்ச்சியில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் எழுச்சிமிகு சொற்பொழிவு

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த இடம் இதுவரை இந்த நகரத்திற்கு சொந்தமானதாக இருந்தது. இன்று இது உங்களுக்கு சொந்தமானதாக ஆகி விட்டது என்று லார்டு மேயர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், நான் இதனைக் கூறுகின்றேன். எங்களது பார்வையில் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கேற்ப பள்ளிவாயில் இறைவனின் வீடாகும். இது எந்தவொரு தனி நபருக்கு அல்லது ஜமாஅத்திற்குச் சொந்தமானது அல்ல. மாறாக, இன்ஷா அல்லாஹ் இங்கு உருவாகும் இந்த பள்ளிவாயில் இறைவனின் வீடாக இருக்கும் நிலையில் இது இறைவனுக்கு சொந்தமானதாகும். இறைவனது வீடு தொடர்பாக திருக்குர்ஆனின் முதல் அதிகாரத்திலேயே நான் ரப்புல் ஆலமீனாக இருக்கின்றேன். அதாவது, நான் எல்லா உலகங்களுக்கும் இறைவனாக இருக்கின்றேன். ஒவ்வொருவரையும் பரிபாலிப்பவனாக நான் இருக்கின்றேன். அவ்வாறே நான் கிறிஸ்தவர்களுக்கும், யூதர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இறைவனாக இருக்கின்றேன் என்று அந்த இறைவன் கூறுகின்றான்.

எனவே, பள்ளிவாயில் இறைவனின் வீடாகும் என்று நாம் கூறும் போது இறைவனின் படைப்பினங்களுக்காக இந்த பள்ளிவாயிலிலிருந்து அன்பு, நேசம் மற்றும் சகோரத்துவத்தின் தூதுச் செய்தி எழ வேண்டும் என்பதே இதன் பொருளாகும். இந்த இறைவனின் வீட்டிற்கு வருகின்ற மக்கள் இறைவனை வணங்குவதற்காக வரும் மக்கள் அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றை மட்டுமே பரப்புவர். அவர்கள் இந்த சமுதாயத்திலும் சிற்றூரிலும் அமைதியையும் நிம்மதியையும் பரப்புவர் என்ற அறிவிப்பு இங்கிருந்து செய்யப்பட வேண்டும். எனவே, இறைவனின் வீட்டிற்கு இருக்கும் அந்தஸ்து இதுவேயாகும். இதற்கு எங்களது பார்வையில் ஓர் உயர்வான அந்தஸ்து இருக்கின்றது. இதற்காக ஒவ்வோர் அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும்.

எனவே, இந்த இறைவனின் வீட்டில் தொழுவதற்காகவும் இறை வணக்கம் செய்வதற்காகவும் நீங்கள் வரும்போது எங்கு நாம் இறைவனை வணங்க வேண்டுமோ, அவனுக்குரிய உரிமையைச் செலுத்த வேண்டுமோ அங்கு இறைவனின் படைப்பினங்களுக்கான உரிமையையும் செலுத்த வேண்டும் என்ற சிந்தனையுடன் வர வேண்டும். பரஸ்பரம் அஹ்மதிகளில் ஓர் அஹ்மதி மற்ற அஹ்மதிகளுடன் அன்புடனும், நேசத்துடனும், சகோதரத்துவத்துடனும் இங்கு வாழ வேண்டும். உங்களது அண்டை வீட்டுக்காரருக்குரிய உரிமையையும் செலுத்த வேண்டும். அவர்களுடன் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

திருக்குர்ஆனில் அண்டை வீட்டுக்காரருக்குரிய உரிமை பற்றி எந்த அளவு கூறப்பட்டிருக்கின்றது என்றால் உங்களுக்கு அருகில் இருப்பவர்கள், உங்களுடன் சேர்ந்து வேலை செய்பவர்கள், உங்களுடன் பயணத்தில் இருப்பவர்கள், உங்களுக்கு கீழிருப்பவர்கள் ஆகிய இவர்கள் அனைவருமே உங்களது அண்டை வீட்டுக்காரர்கள் ஆவர் என்று அது கூறுகின்றது. இவ்வகையில் அண்டை வீட்டுக்காரர்களின் மிகவும் விரிவான ஒரு களம் அஹ்மதி முஸ்லிம்களுக்காக இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால், உண்மையான முஸ்லிம்களுக்கு அது இருக்கின்றது. எனவே, அண்டை வீட்டுக்காரர்களுக்குரிய உரிமை எந்த அளவு பெரியது என்றால், அல்லாஹ் எங்களது நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இது பற்றி வலியுறுத்தி போதித்திருந்தான் என்றால், வாரிசாவதற்கான சட்டத்தில் அண்டை வீட்டுக்காரர்களைக் கூட எங்களுடன் அவன் சேர்த்து விடக் கூடாதே என்ற எண்ணம் என்னிடம் ஏற்பட்டது என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எந்த அளவிற்கு இவ்விஷயத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது என்றால் ஒருவேளை அண்டை வீட்டுக்காரர்கள் கூட வாரிசாக ஆகுவதற்கான உரிமையுள்ளவராக ஆகி விடுவர் என்று கருதப்பட்டது. ஆக, அண்டை வீட்டுக்காரர்களுக்கு இந்த அளவு முக்கியத்துவம் இருக்கின்றது. இங்கு அஹ்மதிகளின் எண்ணிக்கை 184 பேர் ஆகும். எனவே, இந்த நகரத்தில் வசிக்கின்ற அவர்களுக்கு இஸ்லாம் அண்டை வீட்டுக்காரர்கள் தொடர்பாக கூறும் விளக்கத்திற்கேற்ப முழு நகரமும் அண்டை வீடாக ஆகி விடுகின்றது. எனவே, அதற்குரிய உரிமையை அவர்கள் செலுத்த வேண்டும். அவர்கள் இன்னும் கூட இந்த உரிமையைச் செலுத்திக் கொண்டிருக்கின்றனர் என்று நான் நம்புகின்றேன். அவ்வாறே இந்த பள்ளிவாயில் கட்டப்பட்ட பிறகு அவர்கள் முன்னரை விட அதிகமாக இந்த உரிமையைச் செலுத்தக் கூடியவர்களாக இருப்பார்கள் என்றும் சாந்தி, அமைதி மற்றும் அன்பின் தூதுச் செய்தியை முன்பை விட அதிகமாக பரப்புவர் என்றும் நான் நம்புகின்றேன். செங்கற்களை அடுக்கி கட்டடம் கட்டப்படும்போது நாமும் அவற்றைப் போன்றே ஒன்றிணைந்து இருப்போம் என்பதற்கான ஓர் அடையாளம் உருவாக்கப்படுகின்றது என்ற விஷயத்தையும் கூட லார்டு மேயர் அவர்கள் கூறினார்கள். நிச்சயமாக இது மிகவும் நல்ல விஷயமாகும். ஆனால், நாம் கற்களாலான அல்லது செங்கற்களாலான கட்டங்களைக் கட்டும்போது, மேலும் அந்த செங்கற்களை ஒன்று சேர்க்கும்போது அத்துடன் வெளிப்படையான ஒரு தோற்றத்தைத் தவிர இன்னோர் எண்ணமும் நம்மிடையே எழுகின்றது. அதாவது, நாம் அன்பு மற்றும் நேசத்தின் சுவர்களை எழுப்பிக் கொண்டிருக்கின்றோம். இந்த சுவர்களை ஒன்றிணைப்பவர்களாக நாம் இருக்கின்றோம். அந்த சுவர்கள் எவ்வளவு வலுவானதாக ஆகி விடும் என்றால் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தின் இந்த சுவர்கள் ஒருபோதும் வீழ்ந்து விடக் கூடாது. அவற்றின் உறுதி எப்போதும் அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணம் நம்மிடம் உருவாகின்றது. இந்த சுவர்கள் வலுவாக இருப்பதற்கும் கட்டடங்கள் உறுதியாக நிலைத்திருப்பதற்கும் சிறிது கால இடைவெளியில் அவ்வப்போது அவற்றிற்கான பராமரிப்புப் பணிகளும் நடந்து கொண்டே இருக்க வேண்டியது அவசியமானதாகும். எனவேதான் இஸ்லாம் நீங்கள் மார்க்கத்தின் கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும் என்று கூறுகின்றது. உங்களது இறைவனுக்குரிய உரிமையையும் செலுத்திக் கொண்டே இருங்கள். அவ்வாறே அவனது அடியார்களுக்குரிய உரிமையையும் செலுத்திக் கொண்டே இருக்க வேண்டும். உங்களது போதனைகளுக்கு ஏற்ப செயல்படுவதற்கு உங்களது தரங்களை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். அதன் மூலமாக இந்த அன்பு மற்றும் நேசத்திலுள்ள உறுதி நிலைத்து நிற்பதுடன் மட்டுமல்லாமல் அது மேலும் வலுப்பெற வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது. கற்களாலான சுவர்களில் அதன் உறுதித் தன்மையின் வரம்புகள் முடிவுக்கு வந்து விடுகின்றன. எந்த அளவுக்கு சுவர்கள் வலுவாக கட்டப்பட்டிருக்குமோ அந்த அளவில்தான் அது வலுவாக நிலைத்திருக்கின்றது. ஆனால், அன்புடனும் நேசத்துடனும் எழுப்பப்படும் இந்த சுவர்களில் ஒவ்வொரு நொடியும் Reinforce ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அதாவது, ஒவ்வொரு நொடியும் அது வலுப்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அவற்றில் மேலும் ஆற்றல் உருவாகிக் கொண்டிருக்கின்றது. எனவே, கட்டடங்களை எழுப்பும்போது எங்களது எண்ணங்களில் இந்த விஷயங்களே வருகின்றன.

மேயர் அவர்கள் ஒரு மரத்தை அன்பளிப்பாக வழங்கினார்கள். இதற்காகவும் நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். மரத்தின் வேர்கள் பூமியில் வலுவாக நிலைபெற்றிருக்கும். இந்த வேர்கள் வலுவடைந்து விடும்போது அதுபோன்றே இங்கு உங்களது பாதங்கள் வலுவடைந்து விடும். நீங்கள் இங்கு இருப்பது நீங்கள் உங்களது வேர்களை இந்த பூமியில் நடுகின்றீர்கள் என்பதற்கான ஆதாரமாகும் என்று மேயர் அவர்கள் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்திக் கூறினார்கள். ஆனால் எங்களுக்கு இஸ்லாத்தின் போதனை இன்னோர் எண்ணத்தையும் நம்மிடம் ஏற்படுத்துகின்றது. அது இதுவாகும். அதாவது, நீங்கள் எப்படிப்பட்ட மரமாக இருக்கின்றீர்கள் என்றால் அதன் வேர்கள் பூமியில் நிலைபெற்றிருக்கின்றது. அதன் கிளைகள் விண்ணை எட்டி விடுகின்றது. அதன் கிளைகள் வானத்தைச் சென்றடைகின்றன. அதாவது அவை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்படக் கூடியவையாகும் என்பதே அதன் பொருளாகும். அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும் என்பது அல்லாஹ்வின் கட்டளையாகும். இவ்வகையில் பூமியில் நாம் எங்கு நமது வேர்களை வலுவாக நிலைநிற்கும்படி செய்கின்றோமோ அங்கு வானம் வரை சென்றடைந்துள்ள அந்த கிளைகள் மூலமாக, கனிகளை நமக்கு தரக்கூடிய அந்த கிளைகள் மூலமாக நாம் இங்குள்ள மக்களுக்காக அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தின் கனிகளை உருவாக்குபவர்களாக இருக்கின்றோம் - இன்ஷா அல்லாஹ்.

ஜமாஅத்திலுள்ள நபர்கள் இதற்கேற்ப செயல்பட்டுக் கொண்டிருப்பர் என்று நான் நம்புகின்றேன். இங்கு Integration அதாவது ஒற்றுமை பற்றி கேள்வி எழுகின்றது. முஸ்லிம்களிடம் ஒற்றுமை இல்லை. அவர்கள் மக்களுடன் ஒன்றாக இணைந்து செயல்படுவதில்லை என்ற கருத்து பொதுவாக இங்கு நிலவுகின்றது. எனக்கு சில நேரங்களில் இங்கு இருக்கின்ற குழந்தைகளிடம் பேசுவது கடினமாக இருக்கின்றது. ஏனென்றால் அவர்கள் எந்த அளவு இங்குள்ளவர்களுடன் ஒன்றி விட்டனர் என்றால் எந்த மொழியை அவர்கள் இங்கு எடுத்துக் கொண்டு வந்தனரோ அல்லது எந்த மொழியை அவர்களது பெற்றோர்கள் பேசுகின்றனரோ அந்த மொழியையே அவர்கள் மறந்து விட்டனர். ஒருவர் இங்கு பேசப்படும் உள்ளூர் மொழியான ஜெர்மன்

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Vol. 1 Thursday 17 NOVEMBER 2016 Issue No. 37

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

மொழியில் பேசுகின்றார் என்றால் தாம் கூற வந்த கருத்தை ஜெர்மன் மொழியில் கூறுகின்றார் என்றால் அவர் முற்றிலுமாக தன்னை தனது இந்த சுற்றுச் சூழலுடன் ஒன்றச் செய்து விட்டார் என்பதே அதன் பொருளாகும். மேலும் அந்த சுற்றுச் சூழலில் அவர் ஈர்க்கப்பட்டுள்ளார் என்பதே அதன் பொருளாகும். எனினும், மார்க்கம் என்பது உள்ளத்துடன் தொடர்புடைய விவகாரமாகும். மார்க்கத்தில் எவ்வித பலவந்தமும் இல்லை என்று திருக்குர்ஆன் கூறுகின்றது.

மொழிகளைப் பேசுபவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றனர். உலகில் நூற்றுக்கணக்கில் மொழிகள் பேசப்படுகின்றன. அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தும் உலகின் நூற்றுக்கணக்கான நாடுகளில் இருக்கின்றது. அந்த நாடுகளில் பல்வேறு மக்கள் தத்தமது மொழிகளைப் பேசுகின்றனர். ஆனால், அவர்கள் தமது நாட்டுடன் நன்றி உணர்வுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். அந்த நாட்டுடன் அவர்கள் ஒன்றி விட்டனர். அத்துடன் தமது மார்க்கத்தின் போதனைகளுக்கேற்ப செயல்படுபவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர். நீங்கள் நாட்டிற்கு நன்றி செலுத்தாதவர்களாக இருங்கள் என்று திருக்குர்ஆன் எங்குமே கூறவில்லை. மாறாக, உங்களது நாட்டின் மீது அன்பு கொள்வது உங்களது ஈமானின் ஒரு பகுதியாகும் என்று நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நாட்டின் மீது நாம் வைத்திருக்கும் அன்பு ஈமானின் ஒரு பகுதியாக ஆகி விட்ட பிறகு உண்மையான மார்க்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கும் ஓர் உண்மையான முஸ்லிம் தமது நாட்டிற்கு நன்றி செலுத்தாதவராக நடந்து கொள்வார் என்பது எப்படி நடக்க முடியும்? நிச்சயமாக அவர் நாட்டின் மீது நன்றியுணர்வு உள்ளவராகவே இருப்பார். எவர் முழுமையான முறையில் நாட்டின் சட்டங்களைப் பேணி நடக்கின்றாரோ அவர்தான் நாட்டின் மீது நன்றியுணர்வுள்ளவராக இருக்க முடியும். அவர் நாட்டின் முன்னேற்றத்திற்காக தமது எல்லா முயற்சிகளையும் மேற்கொள்பவராக இருப்பார். இந்த விஷயங்கள் உருவாக வேண்டும் என்று நாம் நமது ஜமாஅத்திலுள்ள நபர்களிடம் கூறுகின்றோம். நாம் நாட்டின் மீது கொள்ளும் அன்பு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்றால் அது ஓர் அடையாளமாக ஆகி விட வேண்டும். அஹ்மதிகள் எல்லாரையும் விட அதிகமாக சட்டத்தைப் பேணி நடப்பவர்களாவர். அஹ்மதிகள் எல்லாரையும் விட அதிகமாக நாட்டின் முன்னேற்றத்தில் பங்கு பெறுபவர்களாவர். அஹ்மதிகள் எல்லாரையும் விட அதிகமாக தமது சுற்றுச் சூழலில் அன்பு, நேசம் மற்றும் சாந்தியின் தூதுச் செய்தியைப் பரப்புபவர்களாவர். தமது அனைத்து முயற்சிகளையும் தகுதிகளையும் இப்பணியை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிக்கக் கூடியவர்களாவர் என்பது உலகிற்கு தெரிய வேண்டும்.

ஆக, இதுவே இஸ்லாத்தின் போதனையாகும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கே நமது பள்ளிவாயில்கள் நிறுவப்படுகின்றன. பள்ளிவாயில்கள் கட்டப்படும்போது பிறகு அங்கிருந்து மேலும் அதிகமாக அழகிய வடிவில் அன்பு மற்றும் நேசத்தின் தூதுச் செய்தி வெளிப்பட்டு உலகில் பரவுகின்றது. இந்தப் பள்ளிவாயில் கட்டப்பட்ட பிறகு அஹ்மதிகள் எங்கு முன்னரை விட அதிகமாக தமது இறை வணக்கத்திற்குரிய உரிமையைச் செலுத்தக் கூடியவர்களாக இருப்பார்களோ அங்கு இந்த சுற்றுச் சூழலில் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைப் பரப்பக் கூடியவர்களாகவும் அவர்கள் இருப்பர். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவானாக! நன்றி.

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

கூட ஏற்றுக் கொள்ளவில்லை. எவர் மீது இறைவனது பார்வையில் முதல் வகையான நிராகரிப்பு அல்லது இரண்டாவது வகையான நிராகரிப்பு தொடர்பான அத்தாட்சி நிறைவடைந்து விட்டதோ அவர் கியாமத் நாளன்று தண்டனைக்கு தகுதியுடையவராக இருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. எவர் மீது இறைவனின் பார்வையில் அத்தாட்சி நிறைவடையவில்லையோ அவர் பொய்ப்படுத்துபவராகவும் மறுப்பவராகவும் இருந்தால் (வெளிப்படையான விஷயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள) ஷரீஅத் அவரை காஃபிர் என்ற பெயரிலேயே அழைக்கின்றது. ஆனால் அவ்வாறிருந்தும் கூட இறைவனது பார்வையில் لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا اِلَّا وُسْعَهَا (அல்லாஹ் எவனுக்கும் அவனுடைய தகுதிக்கு அப்பாற்பட்ட பொறுப்பைச் சுமத்துவதில்லை) என்ற வசனத்திற்கு ஏற்ப அவர் தண்டனைக்கு தகுதியுடையவராக ஆக மாட்டார். எனினும், அவர் தொடர்பாக அவர் இரட்சிப்பை பெற்று விடுவார் என்று கூறுவதற்கான அனுமதி நமக்கு இல்லை. அவரது விவகாரம் இறைவனிடம் இருக்கின்றது. நாம் அதில் தலையிடக் கூடாது. நான் இப்போது கூறியது போன்றே அறிவுப்பூர்வமான மற்றும் எழுத்து வடிவிலான சான்றுகளும் சிறந்த போதனையும் விண்ணின் அடையாளங்களும் இருந்தும் கூட எவர் மீது இதுவரை அத்தாட்சி நிறைவடையவில்லை என்பதைப் பற்றிய அறிவு இறைவனுக்கு மட்டுமே இருக்கின்றது. இந்த நபர் மீது அத்தாட்சி நிறைவடையவில்லை என்று நாம் வாதம் செய்து கூறக் கூடாது. எவரது அந்தரங்கத்தைப் பற்றிய அறிவும் நமக்கு இல்லை. எல்லா வகையான ஆதாரங்களையும் எடுத்து வைத்து அடையாளங்களைக் காட்டுவதன் மூலமாக தமது அத்தாட்சிகளை மக்கள் மீது நிறைவடையச் செய்ய வேண்டும் என்பதே இறைவனது ஒவ்வொரு தூதரின் எண்ணமாக இருந்திருக்கின்றது. இது தொடர்பாக இறைவனும் கூட இதற்கு ஆதரவாக இருந்திருக்கின்றான். எனவே, எந்த நபர் என் மீது அத்தாட்சி நிறைவடையவில்லை என்று வாதம் செய்கின்றாரோ அவரது மறுப்பிற்கு அவரே பொறுப்பாளியாக இருக்கின்றார். இந்த விஷயத்திற்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டும் என்ற சுமையும் அவரது கழுத்தின் மீதே இருக்கும். அறிவுப்பூர்வமான மற்றும் எழுத்து வடிவிலான ஆதாரங்களும், சிறந்த போதனையும் விண்ணின் அடையாளங்களும், எல்லா வகையான வழிகாட்டலும் இருந்தும் கூட அவர் மீது ஏன் அத்தாட்சி நிறைவடையவில்லை ? என்பதற்கு அவர்தான் பதில் கூற வேண்டியவராவார். எவர் மீது அத்தாட்சி நிறைவடையவில்லையோ அவருக்கு இஸ்லாம் பற்றிய தகவல் கிடைத்திருந்தும் அவர் அதை மறுக்கும் நிலையிலும் கூட இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்ற வாதம் முழுக்க முழுக்க வீணானதும் வெற்று வாதம் மட்டுமேயாகும். மாறாக, இத்தகைய விஷயங்களை பேசுவதனால் இறைவனுக்கு இழுக்கு ஏற்படுகின்றது. ஏனென்றால், எந்த வல்லமைமிக்க ஆற்றல் படைத்த இறைவன் தனது தூதரை அனுப்பியுள்ளானோ அவனது மகிமைக்கு இதனால் குறைவு ஏற்படுகின்றது. நான் எனது அத்தாட்சியை நிறைவு செய்வேன் என்ற இந்த வாக்குறுதியை அவன் செய்திருந்தும் கூட பொய்ப்படுத்துபவர்கள் மீது தனது அத்தாட்சியை அவனால் நிறைவடையச் செய்ய முடியவில்லை என்றால் வாக்குறுதியை மீறும் கட்டாயத்திற்கு அவன் ஆளாகி விடுகின்றான். அவர்களோ அவனது தூதரை பொய்ப்படுத்தவும் செய்தனர். பிறகு இரட்சிப்பையும் பெற்றனர். இஸ்லாம் மார்க்கத்திற்காக இறைவன் ஏற்படுத்தியுள்ள அடையாளங்களைப் பார்க்கும்போது, மேலும் அறிவுப்பூர்வமான எழுத்து வடிவிலான ஆதாரங்களைப் பார்க்கும்போது மாற்று சமுதாயங்களின் மதங்களில் இல்லாத ஆயிரக்கணக்கான சிறப்புகள் இஸ்லாத்தில் இருப்பதை நாம் பார்க்கின்றோம். ஏனைய மதங்கள் எந்த நிலைமையில் இருப்பதை நாம் பார்க்கின்றோம் என்றால் ஒன்று அவர்கள் படைப்பினங்களை வணங்குவதில் சிக்கியுள்ளனர் அல்லது இறைவன் எல்லாவற்றையும் படைத்தவன், எல்லாவற்றிற்கும் ஆரம்பமாக இருப்பவன், எல்லா அருள்களின் தலையூற்றாக விளங்குபவன் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதைப் பார்க்கும்போது ஒருவருக்கு இஸ்லாத்தைப் பற்றிய தகவல் கிடைத்திருந்தும் கூட அவர் மீது அத்தாட்சி நிறைவடையாத நிலையில் அவர் இரட்சிப்பைப் பெற்று விடுவார் போன்ற வீணான விஷயங்களை உலகில் பரப்புகின்ற அத்தகைய மக்களை பார்த்து நமக்கு வேதனை ஏற்படுகின்றது. சரியான சம்பவங்களை வேண்டுமென்றே தெரிந்து கொள்ளாமலும் அவற்றை ஏற்றுக் கொள்ளாமலும் இருப்பதும் கூட இழப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். உதாரணமாக, மருத்துவர்கள் கொடிய மேக நோயால் பாதிக்கப்பட்டுள்ள பெண்ணுக்கு அருகில் செல்ல வேண்டாம் என்று பிரசுரம் மூலம் தெரிவித்திருந்த நிலையில் ஒரு நபர் அத்தகைய பெண்ணுடன் நட்பு வைத்திருந்து பிறகு மருத்துவர்கள் வழங்கிய பிரசுரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அவ்வாறிருக்க எனக்கு ஏன் மேக நோய் வந்தது என்று அவர் இப்போது கேட்பது பயனற்ற விஷயமாக இருக்கும். பாபா நானக் அவர்கள் உண்மையை கூறியுள்ளார்கள். ع مندے کمیں نانکا جد کد مندا ہو (அதாவது நானக்கே தீய பணிகளால் இறுதியில் தீமைதான் ஏற்படுகின்றது) என்று அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவற்றவர்களே ! இறைவன் தனது நடைமுறைக்கேற்ப தனது மேலான மார்க்கத்தின் அத்தாட்சியை நிறைவடையச் செய்து விட்டான். இப்போது இதில் சந்தேகங்களை நுழையச் செய்வதும் இறைவன் அத்தாட்சிகளை நிறைவடையச் செய்திருந்தும் வீணாக விஷயங்களை எடுத்துக் கூறுவதற்கான என்ன தேவை இருக்கின்றது ? உண்மையிலேயே இறைவனது அறிவில் அத்தாட்சி நிறைவடையாத நிலையில் எவராவது ஒருவர் இருக்கின்றார் என்றால் அவரது விவகாரம் இறைவனுடன் இருக்கின்றது. நாம் இதில் விவாதம் செய்ய வேண்டிய தேவையில்லை. எனினும், எவர் இஸ்லாத்தைப் பற்றி முழுக்க முழுக்க அறியாதவராக இருக்கின்றாரோ அவர் அதைப் பற்றி அறியாமலேயே மரணமடைந்து விட்டால் உதாரணமாக, பருவ வயதை அடையாத சிறுவர்கள் மற்றும் பைத்தியக்காரர்கள் அல்லது இஸ்லாம் சென்று சேராத அத்தகைய ஒரு நாட்டில் வசிப்பவர்கள் ஆகியோர் இதில் அடங்குவர். அவர்கள் காரணம் கூறத் தகுதியுடையவர்களாக இருக்கின்றனர்.

(ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 184-188)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad